ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

12.11.2026

1. அருட்கடலே ஞான வள்ளலே
அகிலம் காத்திடும் சண்முகவேலே
வரம் தந்து அரங்கன் என்னை
வையகத்தில் உன் அவதாரமாக்கி

2. ஆக்கியே பிரணவக் குடில் படைத்து
அறம் தருமம் சன்மார்க்கமெனும்
ஆக்கமான சேவை ஆற்றிடச் செய்து
அளவிலா சேவை கடந்த பின்னே

3. கடந்தபின் சரவண ஜோதியுள்
கலந்திடச் செய்த கந்தா போற்றி
இடரின்றி இவ்வுலக மக்கள் மேம்பட
இனிதே பராபவ துலை திங்கள்

4. திங்களிலே சதுர் கடை குருவார
தக்க அருளாசி தன்னை உரைப்பேன்
ஓங்கார ஞான உலகம் ஆக்க
உலகோர் முருகப்பெருமான் தன்னை

5. தன்னையே இறைவனாக தலைவனாக
தக்கபடி ஏற்று வணங்கியே
சண்முகனார் பிரணவக் குடிலை
சரணாகதி கொண்டு மக்களெல்லாம் வர

6. வருகவே உலக மக்களுக்கு
வல்லமைபட அரங்கனென்னுடன்
முருகப்பெருமான் அருளும் தயவும்
முழுமைபட கிட்டி மாற்றம் காணும்

7. காணவே முழுமதி பூசை கலந்து
கட்டாயம் பிரணவக் குடிலின்
ஞான அருளமுதை உண்டுமே
ஞானிகள் பேரில் நாமசெபம் போற்ற

8. போற்றவே புண்ணியம் செய்யும்
புரிதலும் எண்ணமும் கூடியே

ஆற்றல்மிக்க பிரணவக் குடிலின்
அன்னதானத்தில் பொருளுதவி செய்து

9. செய்துமே தன் வினை வெல்லும்
சிறந்த தருமவான் ஆகியே
மெய் ஞானம் எனும் மேல்நிலையை
முருகனே முன் நின்று வழிநடத்த

10. வழிநடத்த வரும் மக்களெல்லாம்
வறுமை வஞ்சம் பிணி மூப்பு
அழிவான நிலைகளை கடந்து
அழியாமை எனும் பெருநிலை அடைவர்

11. அடையவே அரங்கனென் அவதார
அனைத்து சூட்சுமமும் விளங்கி
தடையற என் வழி ஞானிகளாவர்
தாமுரைத்த குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி